*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 – 4613**
**Volume – VII (2)**
**May - 2023**

# துர்க்கையம்மன் வழிபாட்டில் விழா மரபுகள்

விந்தியகௌரி, பொ.
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding Author's mail id: vinthiyagowri@vvvcollege.org**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்தில் சிறுதெய்வ வழிபாடு மிகப் பழங்காலந்தொட்டு வழக்கில் காணப்படுகின்றது. தாய்வழி உரிமைச் சமுதாயத்தில் பெண்தெய்வ வழிபாடு முக்கியமானதாயிருக்கிறது. பெண் தெய்வம் இனப்பெருக்கம், செல்வவளம் இவற்றின் அதிதேவதையாகக் கருதப்பட்டிருக்கிறது. நம்பிக்கைகள் மரபுவழியில் காலம் காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினர்க்குப் பரவிவருகின்றன. தனிமனித நம்பிக்கை காலப்போக்கில் சமுதாய நம்பிக்கையாக மாற்றம் பெறுகிறது. துர்க்கையம்மனுக்கு ஆண்டுக்கு ஒருமுறை திருவிழா கொண்டாடிப் பலிகொடுத்தால் மழை நன்றாகப் பெய்யும். மக்கள் அனைவரும் நலமுடன் வாழ்வார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. நல்ல நிமித்தம் பார்த்துக் கோவில் விழாக்களுக்குச் சென்றால் அந்த ஆண்டு முழுவதும் நன்மைகள் பல நிகழும் என்ற நம்பிக்கை மக்களிடம் உண்டு. சிறுதெய்வங்களுக்கு உயிர்ப் பலியிடுதல் மிகப்பழமையான மரபு. தெய்வம் தொடர்பான செயல்கள் அனைத்தும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே செய்யப்படுகின்றன. திருவிழாக் காலங்களில் மக்களை மகிழ்விப்பதற்கென்று கலை நிகழ்ச்சிகள் பல நடைபெறுகின்றன. துர்க்கையம்மன் வழிபாட்டின் மூலம் மக்களின் ஒற்றுமை உணர்ச்சி, பண்பாடு, விருந்தோம்பும் பண்பு முதலியனவற்றைக் காணலாம்.

**கருச்சொற்கள்**

**துர்க்கையம்மன் கோவில், விழா மரபுகள், திருவிழா, வழிபாட்டில் நம்பிக்கைகள், நேர்த்திக் கடன்கள்.**

## முன்னுரை

சக்தி வழிபாட்டின் கூறுகளைச் பல்வேறு கூறுகளுள் துர்க்கையும் ஒன்று சங்க இலக்கிய காலம் முதலே என்று மக்கள் கருதத்தலைப்பட்டனர். தமிழகத்தில் காணமுடிகிறது. சக்தியின் சிறுதெய்வத்திற்கு உருவமும் பெயரும்

கொடுத்து மக்கள் நிலைக்குக் கொண்டு வந்து வழிபடுதலே இனியதும் எளியதும் ஆகுமெனப் பழந்தமிழர் கண்டனர். எனவே கோவில்கள் தோன்றின. தமிழகத்தில் கோயில்கள் அதிகம். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்னும் பழமொழி ஊர்தோறும் மக்கள் கோயில் கட்டியதையும் கோயிலை இன்றியமையாததாகக் கருதியதையும் காட்டுகிறது. மக்கள் தங்களில் வாழ்வில் ஏற்படும் பலவகையான அனுபவங்களினால் இவற்றைச் செய்யலாம், இவற்றைச் செய்யக்கூடாது என்று பாகுபாடு செய்தனர். இவ்விதம் பாகுபாடு செய்த செயல்கள் எல்லாவற்றையும் பின்னர் வந்தவர்கள் காரணமில்லாமலே செய்து வந்ததையே நம்பிக்கையெனவும், பழக்கவழக்கமெனவும் வழங்குகின்றனர்.

சிறுதெய்வ வழிபாட்டில் பிராமணர் அல்லாதவர் பூசாரிகளாக இருத்தல், ஆகம முறைப்படி அல்லாமல் பூசைகள் நிகழ்தல், குருதிப்பலி கொடுத்தல் போன்றவற்றைக் காண முடிகிறது. முன்னோர்களால் உருவாக்கப்பட்ட இச்சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் நாகரிகம் என்ற பெயரால் சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறது. இதனால் வருங்காலத்தில் நம்முடைய சில தொன்மையான மரபுகளை இழக்க வேண்டி வரலாம். இதைத்தடுத்து, பழைய மரபின் வழியே சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் அமைந்திருப்பதனை எடுத்துக் காட்டுவது நலம் பயக்கும் என்ற நோக்கத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சிறுதெய்வங்கள்**

விரிந்த வழிபாடாக இல்லாமல் சுருக்கமான ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரால் அல்லது குறிப்பிட்ட குடும்பத்தினரால் விழாக்கள் நடத்தப்பட்டுச் சிலரால் மட்டும் அறியப்படுவது சிறுதெய்வ வழிபாடுயாகும். சாத்திர விதிப்படி பூசை நடைபெறாது. விசேச விழாக்காலங்களிலும், சிறப்பான நாட்களிலும் மட்டும் பூசை நடத்தப்படுகிறது. பூசாரி அந்தணர் அல்லாதவராய் இருப்பர். சாமியாடிகள் இருந்து பக்தர்களுக்காக அருள் பெற்று வரம் கொடுப்பவர்களாக இருப்பர். உயிர்ப் பலிகள் இத்தெய்வங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. குறிப்பிட்ட காலத்தில் இத்தெய்வங்களுக்கு வழிபாடு நடத்தப் பெறவில்லை என்றால் மக்களுக்கு இத்தெய்வங்களால் தீங்கு உண்டாகும் என நம்பப்படுகின்றது. உலக இன்பம் தரும்படி பக்தர்கள் சிறுதெய்வங்களை வேண்டுகின்றனா்.

**சிறுதெய்வங்களின் பகுப்பு**

கிராமங்களில் காணப்படும் சிறுதெய்வங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை ஆண் தெய்வங்கள் மற்றும் பெண்தெய்வங்கள் எனவும் ஊர்த் தெய்வங்கள் மற்றும் குலதெய்வங்கள் என இத்தெய்வங்கள் மக்களால் இருவகையாக வணங்கப்படுகின்றன.

**துர்க்கையம்மன் கோவில்**

‘‘தமிழருக்கே உரித்தான கொற்றவை ஆரியப் பண்பாட்டின் கலப்பினால் துர்க்கை என்னும் பெயர் பெற்றாள் என்பது அறிஞர் பலரது ஆய்வுரையாகும். துர்க்கை என்ற பெயருக்கு ஆபத்துக்களை நீக்குபவள் என்று வேர்ச்சொற் பொருள் கூறுவர். இவளே ஆற்றுத் துறைகளில் காவல் தெய்வமாவாள். காட்டு விலங்குகளையும்,

வேட்டுவர்களையும் காப்பவளாகக் கருதப்பட்டாள். துர்க்கையம்மனின் கதைப்பாடல், கும்மிப் பாடல்களில் திருமாலின் தங்கையாகத் துர்க்கை சித்தரிக்கப்பட்டுள்ளாள். சிலப்பதிகார காலத்தில் கொற்றவை திருமாலுக்குத் தங்கையாகக் கருதப்பட்டாள் என்பதை ‘‘மாலவற் கிளங்கிளை’’ என்னும் கூற்று இனிது விளக்குகிறது. மேலும் இவள் கவுரி என்னும் பெயரினைப் பெற்றிருந்ததால் உமையன்னையின் ஓர் அம்சமாகவும் கருதப்பட்டாள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பிற்கால இலக்கியங்களிலும் இச்செய்தி மிகுதியாகக் காணப்படுகின்றன’’[1] (ஏ.ஏகாம்பரநாதன், கோயிலும் இறைவழிபாடும், ப.17). துர்க்கையம்மனை “எல்லா வல்லமை படைத்த துர்க்கை பெருங்காட்டிலுறைபவள்”[2] (கலித்தொகை, பாலைக்கலி, 89:8) என்று கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது. துர்க்கையம்மன் கோவிலானது கிருஷ்ணன் கோவில் செல்லும் சாலைக்கு வடக்குப் புறத்தில் பாட்டக்குளத்திற்குச் சற்றுத் தள்ளி, காட்டிற்குள் ஆற்றிற்கு நடுவில் அமைந்துள்ளது. இக்கோவில் வடக்கு நோக்கி அமைந்திருப்பதால் துர்க்கையை ‘வடக்கு வாய்ச்செல்வி’ என்றும் அழைப்பதுண்டு. இக்கோவில் அவ்வூர் மக்களின் ஊர்த்தெய்வம் ஆகும்.

## வழிபாட்டுமுறைகள்

இன்றைய வாழ்வில் மக்கள் தங்கள் துன்பங்களைப் போக்கிக் கொள்ளவே தெய்வங்களை வழிபடுகின்றனர். துர்க்கையம்மன் கோவில் செவ்வாய், வெள்ளி மட்டுமே திறக்கப்பட்டு அம்மனுக்கு வழிபாடு நடைபெறுகிறது. அம்மனுக்கு மாலை போட்டு வழிபடும் மென்முறை வழிபாடும், ஆடு, சேவல் போன்றவற்றைப் பலிகொடுக்கும் பலியிடும் முறை வழிபாடும் நடைபெறுகின்றன.

## விழா மரபுகள்

“யாதொரு பொருளை யாதொரு சொல்லால் யாதொரு நெறியால் அறிவுடையார் சொன்னார்களோ அப்படிச் சொல்லுதல் மரபு”[3] (ஆ.சிங்காரவேலு முதலியார், ப.1266) என்பது விழாக்களில் தொன்று தொட்டுப் பயின்று வரும் சில வழக்காறுகளைக் குறிப்பதாகும். அவை ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்து வரும் தலைமுறையினர்க்கு மரபு வழியில் புகட்டப்பட்டதாகவே காட்சி தருகின்றன. அவை ஊர், குடும்பம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்டு விளங்குகின்றன. ஆகவே பண்பாடுகள் தோறும் விழா மரபுகள் மாறுபட்டிருக்கக் காண்கிறோம். பிற பண்பாட்டின் தாக்கத்தால் விழா மரபுகள் மாற்றம் பெற்றிருக்கின்றன. காலத்திற்கு ஏற்ப விழாக்களின் போக்கிலும் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

## பாற்குடத்திருவிழா

வைகாசித் திங்கள் அமாவாசைக்குப் பின் ஒரு நாள் பாற்குடத்திருவிழா நடைபெறும். ஏழு நாள்களுக்கு முன்பே காப்புக் கட்டி விடுவர். திருவிழா அன்று அம்மனுக்குப் பால் அபிசேகம் நடைபெறும். காப்புக்கட்டிய அடுத்த நாளே முளைப்பாரி வளர்த்துத் திருவிழா அன்று அம்மனை வலம் வந்து தண்ணீரில் கரைப்பார்கள். இத்திருவிழாவின் போது அம்மன் முகத்தில்

மஞ்சனை பூசிப் பட்டாடை கட்டி அலங்கரித்திருப்பார்கள். இக்கோவிலில் பெண்கள் எலுமிச்சை விளக்கேற்றி அம்மனை வழிபடுவார்கள். திருவிழா முடிந்ததும் காப்பை அவிழ்த்துவிடுவார்கள். ஆடு, சேவல் போன்றவற்றைத் திருவிழா அன்று பலி கொடுப்பார்கள். மக்கள் நன்மை தீமைகளைத் திருவுளச் சீட்டின் மூலம் தெரிந்து கொள்வார்கள். பூசாரி பல வண்ண மலர்களையும், திருநீற்றையும் தனித்தனியாக வைத்துச் சிறுசிறு கட்டாகக் கட்டி அம்மன் பாதத்திற்கு அடியில் குலுக்கிப் போடுவார். சிறு குழந்தை அதில் ஒன்றை எடுத்துக் கொடுத்ததும் அதன் மூலம் நல்லது கெட்டதைத் தெரிந்து கொள்வார்கள். மேலும் இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கக் குழப்பம் அடைபவர்கள் இம்முறையைப் பின்பற்றுவர்.

**வழிபாட்டில் நம்பிக்கைகள்**

“தன்னுடைய சொந்தக் குணத்தை ஒரு சமூகம் மாற்றும்போது அல்லது இழக்கும்போது அவற்றிற்கு ஏற்ப அதற்கு முன்பே அமைந்திருந்த நடைமுறைகள் நம்பிக்கைகளாய் எஞ்சுகின்றன. வழிபாடு, பழக்கவழக்கங்கள், சடங்குகள் போன்றவை நம்பிக்கை அடிப்படையிலேயே அமைகின்றன”[4] (இராமநாதன், பக். 215-216). கிராமத்து மக்கள் தெய்வம் உண்டு என்பதைச் சாமியாடிகள் இரத்தம் குடிப்பதைக் கண்டு நம்புகின்றார்கள். தெய்வசக்தி ஆட்டக்காரரில் ஏறி நிற்பதாக மக்கள் நம்புகின்றனர். ‘சாமியாடல்’ ‘அருளாடல்’ என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்ற இந்தத் தெய்வமேறிய கலைகள் கிராமிய வாழ்வின் உயிர்நிலைகள். கிராம மக்களின் இன்பம், துன்பம், நோய், எதிர்காலம் எல்லாம் இந்தத் தெய்வ ஆடலுடன் கலந்து நிற்பன.

கல்யாணம் ஆகாத கன்னிப் பெண்கள் துர்க்கையம்மன் கோவிலில் உள்ள வேப்பமரத்தில் திருமாங்கல்யம் கட்டினால் கல்யாணம் ஆகும் என்ற நம்பிக்கை இன்றளவும் நடைமுறையில் உள்ளது. நீண்ட நாள்கள் குழந்தைப்பேறு இல்லாதவர்கள் அம்மன் கோவில் வேப்ப மரத்தில் தொட்டில் கட்டிப்போட்டால் குழந்தை விரைவில் பிறக்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் காணப்படுகின்றது. குலதெய்வத்தை வழிபட்டுக் குழந்தைக்கு முடி காணிக்கை செலுத்தி, காதுகுத்தி, குலதெய்வத்தின் பெயரை வைத்தால் தங்கள் குழந்தை பல ஆண்டுகள் சிறப்புடன் வாழும் என்ற நம்பிக்கை உள்ளது. தாங்கள் நேர்ந்து கொண்ட துர்க்கையம்மன் கோவிலுக்கே நேர்த்திக் கடனைச் செய்யவேண்டும். அவ்வாறு செய்யாமல் அதேபெயர் கொண்ட பக்கத்து ஊரில் உள்ள அம்மனுக்குச் செய்தால் துன்பங்கள் வரும் என்ற நம்பிக்கையும் மக்களுக்கு இருந்து வந்தது. இன்றைய நாளிலும் கிராம மக்களிடையே அம்மன் கோவிலில் சத்தியம் செய்தால் அது பலிக்கும் என்ற நம்பிக்கை இன்றும் உள்ளது.

நிலம் விளைந்து நல்ல விளைச்சல் கண்டு ஆண்டு முழுவதும் உழவர் செய்த முயற்சி பயன் கொடுத்தது. உழவர்கள் இடையூறு வராமல் பயிரைக் காத்து அளித்த தெய்வங்களுக்குக் கொடை கொடுக்கின்றனர். சிலர் மாடு கன்று ஈன்றதும் கறக்கின்ற தொடக்கப்பாலை

துர்க்கையம்மனுக்குக் காணிக்கையாகக் கொடுப்பார்கள். தெய்வம் நன்மை செய்தது, நன்மை செய்யும் என்ற நம்பிக்கை அடிப்படையில், நேர்த்திக்கடனைச் செய்து வழிபடுகின்றனர்.

**மக்களின் பழக்கவழக்கங்கள்**

மனிதனிடம் அமைந்த இயல்பான நடத்தையே பழக்கமாகிறது. அது காலப்போக்கில் வழக்கமாகவே மாறிவிடுகிறது. பழக்க வழக்கங்கள் தேவைகளின் அடிப்படையில் தோன்றியனவாகும். துர்க்கையம்மனை வழிபடும் பக்தர்கள் திருவிழா நடைபெறும் நாட்களுக்கு முன்பு விரதம் இருக்க வேண்டும். ஆண்களும் பெண்களும் காலை, மாலை ஆகிய இரண்டு வேளையும் குளித்துப் பூசைநடைபெறும் நேரங்களில் கோவிலுக்குச் சென்று தெய்வத்தை வழிபட்டுத் திருவிழா முடியும்வரை சுத்தமாக இருக்க வேண்டும் என்ற முறைப்படி இருந்து வருவர். குறிப்பிட்ட நேர்த்திக்கடன் செய்பவர்கள் விரதம் இருக்கும் பொழுது உணவு வகைகளில் மாற்றம் செய்வர். சாதாரண நாட்களில் உண்ணும் உணவில் இடம் பெறும் கருவாடு, மீன், மாமிசம், சில கீரைகள் போன்றவற்றை விழா நாட்களில் தவிர்ப்பர். மக்கள் துர்க்கையம்மன் திருவிழாவின் மூலம் பலதரப்பட்ட மக்களின் பழக்க வழக்கங்களையும் தெரிந்து கொள்கின்றனர். துர்க்கையம்மன் வழிபாட்டின்போது பக்கத்து ஊரிலிருந்தும், வெளியூர்களில் இருந்தும் அத்தெய்வத்தை வழிபடும் உறவினர்கள் பலர் வருவார்கள். அவர்களை ஊரில் இருக்கும் உறவினர்கள் வரவேற்று அவர்களுக்குப் புத்தாடை எடுத்துக்கொடுத்து உணவு, இருப்பிட வசதி போன்றவற்றைச் சிறப்பாகச் செய்து கொடுப்பர்.

**பொங்கல்வைத்தல்**

துர்க்கையம்மனுக்குப் பொங்கல் வைக்க நேர்ந்து கொண்டவர்கள் பொங்கலுக்குத் தேவையான அரிசி, வெல்லம், ஏலக்காய், முந்திரிப் பருப்பு போன்றவற்றையும் விறகையும் சாமி கும்பிடத் தேவையான பொருட்களையும் கோயிலுக்குக் கொண்டு செல்வார்கள். அரிசியைப் போடும்பொழுது அம்மனை வேண்டிக்கொள்வார்கள். சிறிது நேரம் கழித்துப் பொங்கல் பொங்கி வரும்பொழுது அனைவரும் மகிழ்ச்சியுடன் குலவை இடுவார்கள். பின்பு பொங்கல் பானையை அம்மன் முன் வைத்து அதிலிருந்து பொங்கல் கொஞ்சம் எடுத்துப் பெரிய இலையில் அம்மனுக்குப் படைப்பர். மாலைகளை அம்மனுக்குப் போட்டு, தேங்காய் உடைத்துக் கோவிலில் விளக்கேற்றி அம்மனை வழிபடுவார்கள். அதன்பிறகு இவ்வழிபாட்டில் கலந்து கொள்ளும் மக்களுக்குப் பொங்கலைக் கொடுப்பார்கள். இந்த நேர்த்திக் கடனைப் பொதுவாக ஆண் தெய்வத்திற்கும், பெண் தெய்வத்திற்கும் செய்வார்கள்.

**முடி காணிக்கை செலுத்துதல்**

மக்கள் தங்கள் குழந்தைகளுக்குக் குலதெய்வத்திற்கே முதலில் மொட்டை எடுப்பார்கள். மொட்டை எடுத்தலை 'முடியிறக்குதல்' என்றும் கூறுவர். பெற்றோர்கள் தாங்கள் வேண்டியபடி குழந்தை பிறந்தால் குலதெய்வத்திற்கு மொட்டை எடுப்பதாக வேண்டுவார்கள். வேண்டியபடி நடந்து விட்டால் குழந்தைக்கு

ஒன்பதாவது மாதம் அல்லது பதினோராவது மாதம் நடைபெறும்பொழுது கோவிலுக்குச் சென்று மொட்டை எடுத்த உடனே குழந்தையைக் குளிக்க வைத்துத் தலையில் சந்தனம் தடவிப் புத்தாடை உடுத்திக் காது குத்திக் குலதெய்வத்தின் பெயரை வைப்பார்கள். பெரியவர்கள் தாங்கள் வேண்டியது நிறைவேறினால் மொட்டை எடுப்பதாக வேண்டி நிறைவேறிய பின் மொட்டை எடுப்பார்கள்.

**படையலிடுதல்**

படைத்தல் என்பது தெய்வத்திற்குச் சில பொருட்களைக் கொடுப்பதாக நிச்சயித்துப் படைத்தல். மக்களின் உணவுப் பழக்கத்தோடு அவர்கள் வணங்கும் தெய்வங்களுக்குப் படைக்கும் பொருட்களின் உணவு வகைகள் தொடர்பு கொண்டுள்ளதை அறியலாம். இன்ன தெய்வத்திற்கு இது பிடிக்கும் என்று எல்லாத் தெய்வங்களுக்கும் கூறும் நிலையை இன்று காண முடிகிறது. திருவிழா அன்று தெய்வங்களுடைய திருவுருவச் சிலைகள் நன்றாக நீராட்டப்பட்டுப் புத்தாடை அணிவிக்கப்படும். தெய்வங்களுக்கு முன்பு இலைகள் விரிக்கப்பட்டு அதில் பொங்கல், தேங்காய், பழம் மற்றும் அத்தெய்வத்திற்குப் பிடித்தவை வைக்கப்படும். புதிய தானியங்களைத் தெய்வத்திற்குப் படைத்த பின்னரே உண்ணும் வழக்கத்தினைக் கைக்கொண்டுள்ளனர். இதனை அவர்கள் 'புதியது படைத்தல்' என்றழைக்கின்றனர்.

**பிரகாரம் சுற்றுதல்**

பிரகாரம் சுற்றும் நேர்த்திக் கடனைச் சாதாரண நாட்களில் செய்வார்கள். அம்மனிடம் வேண்டியது நிறைவேறியதும் அம்மனை வணங்கி அவரவர் வேண்டியபடி பிரகாரத்தைச் சுற்றுவார்கள். "லிங்கம், பீடம் என்பன உலகத் தோற்றத்தைக் குறிக்கும் சிவசக்திகளின் குறிகள் என்று வடமொழிப் புராணங்களும் பிறவடமொழி நூல்களும் விளக்கமாகக் கூறுகின்றன"[5] (இராசமாணிக்கனார், 1965). பிரகாரத்தைச் சுற்றி வரும்பொழுது பலிபீடத்திற்குக் குறுக்கே சென்று சுற்றக்கூடாது. பக்தன் வலம்வர வேண்டிய முறையைக் கொடிக்கம்பம் விளக்குகிறது. தெய்வம் தனது வலதுகைப் பக்கம் இருக்கும் படிதான் சுற்ற வேண்டும். சுற்றி முடித்தபிறகு பலிபீடத்திற்கு அருகில் சென்று வீழ்ந்து வணங்க வேண்டும். வெறுமனே வீழ்ந்து வணங்குவதால் நலன் ஒன்றும் வந்துவிடாது. வீழ்ந்து வணங்கும்போது தனது கீழான இயல்புகளெல்லாம் அந்த இடத்திலே பலி கொடுக்கப்பட்டன என்று எண்ண வேண்டும். மேன்மையும் மேலான எண்ணமுமே எஞ்சியிருக்கிறது என்னும் எண்ணத்துடன் எழுந்திருக்க வேண்டும். இவ்வாறு மக்கள் எந்த நேர்த்திக் கடனைச் செய்தாலும் முறைப்படியே செய்ய வேண்டும்.

**அன்னதானம் கொடுத்தல்**

தொழிலில் வெற்றியடைந்தவர்களும், குழந்தை வரம் வேண்டி நிறைவேறியவர்களும், மற்றவர்களும் கோவிலில் சமையல் செய்து அங்கு உள்ளவர்களுக்கும், வழிப் போக்கர்களுக்கும், யாசிப்பவர்களுக்கும் அன்னதானம் கொடுப்பார்கள். "கோயிலில் செய்யப்படும் உணவுகள் நோயற்று வாழ வழி காட்டும் வகையில் செய்யப்

பெற்றன."[6] (பரமசிவானந்தம் 1965). பிற நேர்த்திக் கடன்களாகச் சூலாயுதத்தில் மூன்று எலுமிச்சம்பழத்தைக் குத்தி வைப்பார்கள். சிறுமுறம், வண்ணப்பெட்டி, மஞ்சனை போன்றவற்றையும் வாங்கிக் கொடுப்பார்கள்.

மேற்கூறிய நேர்த்திக் கடன்கள் தவிர வேறு சில நேர்த்திக்கடன்கள் கோவிலுக்கும், அம்மனுக்கும் செய்யப்படுகின்றன. கோயிலுக்கு முன்பாக மணி வாங்கிப் போடுதல், வெள்ளி, பித்தளை விளக்கு வாங்கிக் கொடுத்தல் போன்றவை கோவிலுக்குச் செய்யும் நேர்த்திக் கடன்களாகும். அம்மனுக்குப் புடவை வாங்கிப் போடுதல், கொலுசு, நகைகள், குங்குமம், திருநீறு போன்றவை வாங்கிப் போடுதல் போன்றவை அம்மனுக்குச் செய்யும் நேர்த்திக் கடன்களாகும். காணிக்கையெனப் பொதுவாகப் பணத்தை உண்டியலில் போடுவர். சிலர் காணிக்கையைத் துணியில் முடிந்து வைத்துக் கோவிலில் சென்று போடுவர். இதை 'முடிந்து போடுதல்' என்று சொல்வர்.

## துர்க்கையம்மன் கும்மிப்பாடல்

"மனிதனுக்கு இயல்பாகத் தோன்றுகின்ற உணர்வு கலை உணர்வு. இயல்பாகத் தோன்றி இயற்கையோடு இயைந்து உணர்ச்சிகளின் உறைவிடமாய் மக்களைக் களிப்படையச் செய்யும் கலைகள் நாட்டுப்புறக் கலைகளாகும். பெண்கள் ஆடும் ஆட்டங்களில் கும்மியாட்டம் மிகச் சிறப்பானதொன்றாகும். 'கும்முதல்' என்ற சொல்லுக்குக் கைகொட்டுதல் என்பது பொருள். 'குமுமி' என்ற சொல்லினின்றும் 'கும்மி' உருவானதாக அ.கி.பரந்தாமனார் குறிப்பிடுகிறார்."[7] (வாழ்வியற்களஞ்சியம், பக்.643 – 644)

**துர்க்கையம்மா கோவில்ல மங்கையர்கள் கூடி**
**மயிலிறகு நாடி**
**எங்க மங்கையர்கள் மாவிளக்கை மதிக்கிறது**
**கோடி**
**துர்க்கையம்மா கோவில்ல கப்புருக வாழ**
**கனகத் தண்டியாம் மேட**
**கைலாசம் போலிருக்கும் கோவிலொரு சாட**
**துர்க்கையம்மா கோவில்ல கம்பமுகம் பார்வை**
**இந்தமுகம் சேர்வை**
**காசு உள்ள துர்க்கையம்மாளுக்குக் காசுமாலக்**
**கோர்வை**
**தொவரையுடன் கடலப்பயறு சூர்தையுள்ள**
**மொச்சி**
**தோகையெல்லாம் பச்ச நெலந்தொலங்கும்**
**பாசிப்பயறுளுந்தாம்**
**இதைச் சொல்லச் சொல்ல இச்ச**
**நல்லகதர் பாவாடை நாங்கள் தினம் அணிந்து**
**எங்கள் நாயகியைப் பணிந்து நா**
**நாடிக்கும்மிப் பாடிவருவேன் வாங்களம்மா**
**துணுஞ்சு,**
**அன்னமே தேனே பசும்பால் கல்கண்டே**
**அம்புருவே செம்பருவே நா அணிந்திடும்**
**பொம்பருவே**
**மல்லியே முல்லையே மன்னர்கிளியே பிச்சியே**
**எம்மருளே**
**தேடக்கிடையாதத் தெள்ளுமயிலே சித்திரச்**
**சாரங்கமே**
**மாமகள் மேவிய மாநகர்தனில் வண்ணப்பசுங்**
**கிளியே**
**கண்ணுக்குக் கண்ணே காரிய வெல்லமே**
**கட்டிய துர்க்கையம்மா**
**உன்னைநா கண்டதே கங்காட்சி**
**பெண்ணுக்குப் பெண்ணாக உன்னுருவத்தைப்**
**பேசுவது தோதாச்சு**
**பட்டுஇளம் பாவாடையாம் பட்டக்கண்ட போட்டு**
**பட்டணங்கள் நெய்துவரும் பக்தியுள்ள**
**துர்க்கை**
**அச்சடிச்ச சீலையில் அதிகமான செவப்பு**
**அருப்புக்கோட்டை நெய்துவரும் அம்மாளோட**
**சக்தி**
**கக்கத்துல சூலாயுதம் துர்க்கையம்மா**
**கைக்கப்பறை ஏந்தி**
**காரணமா வாரா எங்க கங்குளுந்த துர்க்கை**
**கோபாலந் தங்கையவ எங்களுக்கு குளுந்த**
**வரம் தருவா**
**நாராயணன் தங்கையவ எங்களுக்கு நல்ல**
**வரம் தருவா**
**ஸ்ரீராமன் தங்கையவ எங்களுக்குச் சிறந்த வரம்**
**தருவா**
**ஹரிராமன் தங்கையவ எங்களோட**
**அருங்கவலையைத் தீர்த்திடுவா**
**ஈக்கிபோல வேப்பிலையை எங்கதுர்க்கை**
**எடுத்து விளையாடிடுவா**
**கத்திபோல வேப்பிலையை எங்க துர்க்கை**
**கைநிறையப் பிடிச்சிடுவா**
**வேப்பங்குழைய கையில பிடிச்சு எங்க**
**துர்க்கை வீதி விளையாடிடுவா**

## துர்க்கையம்மன் கும்மிப்பாடல்

கும்மிப்பாடல்கள் கிராமப்புற மக்களின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையவை. ஆடை மானம்காப்பது, அணிகலன் அழகின் கலை, கலை நுணுக்கமும், சமய நம்பிக்கையும் பிறபயன்களும் கால வளர்ச்சியில் இணைந்தன. அவை கும்மிப்பாடல்களில் வெளிப்படுகின்றன.

**ஒன்னுரெண்டு மூனுநாலு அஞ்சுபேருகூடி**
**சிறுபந்து விளையாடி**
**பாடல்களைக் கையிலெடுத்துப் பாடிவரும்**
**ஜோதி**
**காரகட்டடத் துர்க்கையம்மா கல்லுக்கட்டட**
**அமச்சியார்**
**துட்டுப் பெருத்தவத் துர்க்கையம்மா சனம்**
**பெருத்தவ அமச்சியார்**
**அந்தந்த ஊரெல்லாம் ஒத்தஒத்தப் பொங்கல்**
**நம்மஊரு துர்க்கையம்மனுக்கு நெட்டுநெட்டாப்**
**பொங்கல்**
**ஆத்துமணலில் சோறு பொங்கி ஆவாரம்பூ**
**கரிசமைத்து**
**மின்னட்டாம் பூச்சி விளக்கேத்தி**
**வேடிக்கைபார்ப்பா நம்ம துர்க்கையம்மா**
**பாட்டக்குளமாம் பானங்குளமாம் பதினெட்டுப்**
**பட்டியாம்**
**ஈஞ்சாறு பொட்டலாக் கிடந்த**
**பாட்டக்குளத்தைப்**
**பட்டணமாக்கிய துர்க்கையம்மா**
**ஆத்துல படமெடுக்கும் அஞ்சுதலை நாகம்**
**ஆளக்கண்டாப் படமெடுக்கும் அம்மாளோட**
**சக்தி**
**நெருஞ்சி பூத்ததைப் பாருங்கம்மா நெருஞ்சி**
**நெருக்கப் பூத்ததைப் பாருங்கம்மா**
**நெருஞ்சிப் பூப்போலத் துர்க்கையம்மாளுக்கு**
**நெத்தியழகைப் பாருங்கம்மா**
**கத்தரி பூத்ததைப் பாருங்கம்மா கத்தரிகலந்து**
**பூத்ததைப் பாருங்கம்மா**
**கத்திரப் பூப்போலத் துர்க்கையம்மாளுக்குக்**
**கண்ணுப் புருவத்தைப் பாருங்கம்மா**
**பாக படர்ந்ததைப் பாருங்கம்மா பாக**
**பத்திப் படர்ந்ததைப் பாருங்கம்மா**
**பாகப் பூப்போலத் துர்க்கையம்மாளுக்குப்**
**பல்லு வரிசையைப் பாருங்கம்மா**
**மோட்டார் வருவதைப் பாருங்கம்மா**
**மோட்டார் மோதி வருவதைப் பாருங்கம்மா**
**மோட்டார் மேல வாரத் துர்க்கையம்மாளுக்கு**
**மோதிரம் மின்னுவதைப் பாருங்கம்மா**
**சைக்கிள் வருவதைப் பாருங்கம்மா**
**சைக்கிள் சாய்ந்து வருவதைப் பாருங்கம்மா**
**சைக்கிள் மேலவாரத் துர்க்கையம்மாளுக்குச்**
**சங்கிலி மின்னுவதைப் பாருங்கம்மா**
**கார் வருவதைப் பாருங்கம்மா**
**கார் கதறி வருவதைப் பாருங்கம்மா**
**கார் மேல வாரத் துர்க்கையம்மாளுக்கு**
**கண்ணாடி மின்னுவதைப் பாருங்கம்மா**
**பாலுப் பானையைத் தலையிலிட்டுப்**
**பட்சவாரணங்கள் கோசூட்டி**
**பாலுப் பானையும் தளும்பவில்லை**
**பட்சவாரணங்களும் மங்கவில்லை**
**தயிர்ப்பானையும் தளும்பவில்லை**
**தங்கவாரணங்களும் மங்கவில்லை**
**மோர்ப்பானையும் தலையில் இட்டு முத்து**
**வாரணங்கள் கோசூட்டி**
**மோர்ப்பானையும் தளும்பவில்லை முத்து**
**வாரணங்களும் மங்கவில்லை**
**நந்தவனத்தில் நாலுகிளி நாலொரு மாதமா**
**மேஞ்சகிளி**
**கொண்டை வளர்த்தத் துர்க்கையம்மாளுக்குக்**
**கோதி முடியுதாம் ரெண்டுகிளி.**

(தகவலாளர்: மாரியம்மாள் வயது 68, பால்ராஜ் வயது 60, ஊர் பாட்டக்குளம்). துர்க்கையம்மனின் கும்மிப்பாடல்கள் மூலம் அக்கால மக்களின் ஆடைகள், நாகரிகம், பண்பாடு, அணிகலன்கள் போன்றவைகளை அறியமுடிகிறது.

## முடிவுரை

திருவிழாக்கள் உழைக்கும் மக்களின் வாழ்வியல் துன்பத்தைப் போக்கி மகிழ்ச்சியையும் புத்துணர்வையும் ஊட்டும் வகையில் அமைகின்றன. கிராமத்து மக்கள் நல்ல செயல்கள் செய்வதற்காக வெளியூருக்குச் செல்வதற்கு முன் தங்கள் தெய்வங்களை வணங்கிச் செல்வர்.விழா நாட்களில் மக்கள் தொழிலைச் செய்வதில்லை. நம்பிக்கையின் அடிப்படையிலேயே பல நேர்த்திக் கடன்கள் செய்யப்படுகின்றன. விரதங்களை மேற்கொள்ளும் மக்கள் உள்ளத்தூய்மை, உடல் தூய்மை பேணுவதால் நல்ல மனவடக்கத்தையும், உடல்நலத்தையும் பெறுகின்றனர். அச்ச உணர்வை அடிப்படையாகக் கொண்ட வழிபாடு வேண்டுதல்களில் நிறைவுபெறுகிறது. நோய் நொடிகளிலிருந்து விடுபடவும், வாழ்க்கையின் வளமைப் பெருக்கத்திற்காகவும் தெய்வத்திடம் வேண்டுதல்களை வைக்கின்றனர். வேண்டுதல்கள் நிறைவேறியவுடன்

வேண்டுதல்களின் தன்மைக்கேற்ப நேர்த்திக் கடன்களைச் செய்கின்றனர்.

பெண் வகை உயிர்களைப் பலியிட்டால் உயிரினங்களின் பெருக்கம் பாதிக்கப்படும்.துர்க்கையம்மன் வழிபாட்டின் போது ஆண் வகையைச் சேர்ந்த உயிர்களே பலி கொடுக்கப்படுகின்றன. கும்மிப்பாடல்கள் மக்களின் ஆடைகள், நாகரிகம், பண்பாடு, அணிகலன்கள் போன்றவற்றை எடுத்துக்காட்டுகின்றன. மக்களிடம் ஒற்றுமையை உண்டாக்கக் கூட்டு வழிபாட்டு முறை உறுதுணையாக விளங்குகின்றது என்பதை அறிய முடிகின்றது.

## mbf;Fwpg;G


1. ஏகாம்பரநாதன் ஏ (1986). கோயிலும் இறைவழிபாடும். தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
2. கலித்தொகை (1969). பாலைக்கலி, கழகவெளியீடு சென்னை.
3. சிங்காரவேலு முதலியார், ஆ (2016). அபிதான சிந்தாமணி, தமிழ்க்கலைக் களஞ்சியம், சீதைபதிப்பகம், சென்னை.
4. இராமநாதன், ஆறு (1982). நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், மணிவாசகர் நூலகம், சிதம்பரம.
5. இராசமாணிக்கனார், மா (1958). சைவசமய வளர்ச்சி, ஔவை நூலகம், சென்னை.
6. பரமசிவானந்தம் அ.மு. (1965). மானுடம் வென்றது, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், சென்னை.
7. வாழ்வியற்களஞ்சியம் (2004). தொகுதி ஏழு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.